**உ**

## குகமயம்

## வேலும் மயிலும் துணை

# நியுசிலாந்து திருமுருகன் திருப்பணிச்சபைத் தலைவரின் ஆண்டறிக்கை

## 30 புரட்டாதி 2018

எமது அழைப்பை ஏற்று இங்கு வருகை தந்திருக்கும் அனைவரையும் நியுசிலாந்து திருமுருகன் திருப்பணிச்சபையின் சார்பில் அன்புடன் வரவேற்கிறேன். எம்பெருமான் திருமுருகனும் அவரது பரிவாரங்களும் 2013ம் ஆண்டு ஆனி மாதம் 8ந் திகதி ஒரு சுபநேரத்தில் தங்களது புதிய இல்லத்திற்கு குடிபுகுந்தார்கள். தனக்கு உவமையில்லாதவர் தாயினும் சிறந்த தலைவர். எம் ஆறுமுகக் கடவுள் அவர் தாழ் சேர்ந்தோம்.

**<u>வருடாந்த மகோற்சவம் 2018</u>**

இந்த வருடமும் எமது கோயிலின் வருடாந்த மகோற்சவ விழா கனடாவிலிருந்து வந்த நாதஸ்வர மேளவாத்திய இசையுடன் மிகச் சிறப்பாக நடைபெற்றது. பிரசித்திபெற்ற நாதஸ்வர வித்துவான் பஞ்சாபிகேசனின் வாரிசான திரு நாகேந்திரன் நாதஸ்வரம் வாசிக்க திரு பழனிவேல் ஜெகதீஸ்வரன் அவர்கள் தவில் வாசித்தார். இவ் இசையைக் கேட்கவும் பக்தர்கள் கூட்டம் நிரம்பியது. இதேபோன்று 2019ம் ஆண்டுக்குரிய திருவிழாவையும் நடத்த எமது திருப்பணிச்சபை ஏற்பாடுகளைச் செய்து வருகின்றது. இந்த வருடம் வழங்கிய ஒத்துழைப்பை அடுத்த வருடமும் வழங்கி எமது திருவிழாவை சிறப்பாக நடைபெற உதவுமாறு அனைவரையும் அன்புடன் வேண்டிக்கொள்கிறோம். சென்ற முறைவந்து சிறப்பித்த நாதஸ்வர இசைக்குழுவை இம்முறையும் அழைக்க ஏற்பாடு செய்துள்ளோம் என்ற மகிழ்ச்சியான செய்தியையும் உங்களுக்கு தெருவித்துக்கொள்கிறோம்.

**<u>2017/2018 ஆண்டில் முடிவடைந்த வேலைகள்</u>**

நமது கோயிலின் கட்டிட வேலைகள் முடிவுற்ற சான்று பத்திரத்தை (CCC) பெறுவதற்காக விண்ணப்பித்திருக்கிறோம். Councilன் வேண்டுகோளுக்கிணங்க Health & Safety வேலைகளை கடந்த பல மாதங்களாக செய்து முடித்திருக்கிறோம். இதற்காக பல Consultants , Contractors எமக்கு உதவியிருக்கிறார்கள். மிகவிரைவில் CCC நமக்கு கிடைத்துவிடும் என்று நம்புகிறோம்.

இன்னமும் சமூக மண்டபத்தில் சமையலறை வேலைகள் முடிவடையாமல் இருக்கிறது. எப்படியும் இந்த வருடம் சமையலறை வேலையை முடிக்க எமது நிர்வாக சபை முயற்சி எடுத்து வருகிறது. அடுத்த ஆண்டு மகோற்சவத்திற்கு முன் சமையலறை வேலையை முடித்து கோயிலிலேயே உணவு சமைத்து பரிமாற உத்தேசித்துள்ளோம்.

**இளையோரின் பங்களிப்பு**

நமது இளையோர்களும் சிறுவர் சிறுமியர்களும் எமது கோயிலின் வருடாந்த நிகழ்ச்சிகளான பண்ணும் பரதமும்,முத்துச்சரம்,இன்னிசைத் தென்றல் ஆகியவற்றில் கலந்து சிறப்பித்தார்கள்.வெள்ளிக்கிழமை மாலை நேரப் பூசையின் போது திருமுறைகள் பாடி எமது சமய பண்பாட்டை பின்பற்றுகிறார்கள். இவ்வாறாக எமது இளையோர் சங்கீதம்,விளையாட்டு நிகழ்ச்சிகளில் பங்குபற்றி அவர்கள் உடல் ஆரோக்கியத்தையும் மனவளர்ச்சியையும் வளர்த்துக்கொள்கிறார்கள். மற்றும் கோயிலில் நடைபெறும் முக்கிய பூசைகளில் கலந்துகொண்டு பிரசாதம் வழங்குதல் நிகழ்ச்சிகளின் பின் கோயிலை சுத்தபடுத்தல்,அலங்கரித்தல்,எமது ஆலய உணவுபொதி விநியோகம் மற்றும் வலைத்தள அபிவிருத்தி என்பவற்றில் முக்கிய பங்காற்றுகிறார்கள். மேலும் இளைஞர்கள் எமது கோயிலின் நிர்வாக சபையிலும் சேர்ந்து வருங்காலங்களில் எமது கோயிலுக்கு தொண்டாற்ற வேண்டுமெனக் கேட்டுக்கொள்கின்றேன்.

இதுவரை உதவியளித்தது போன்று இராஜகோபுர வேலை மற்றும் சமையலறை வேலையையும் நிறைவேற்ற உங்கள் உதவியையும் நாடி நிற்கின்றோம். குறைந்தபட்சமாக இப்பணியினை நிறைவேற்ற டொலர் மூன்று லட்சம் தேவைப்படுகிறது. இத் தெய்வீகப்பணி நிறைவேற உங்கள்

அனைவரது பேராதரவை நாடி நிற்கின்றோம். எங்கள் காலத்திலேயே இப்பணியைச் செய்து முடித்தால் தென்குமரிகண்டத்திலும் ஒரு அழகான முருகன் கோயில் அமைத்த பெருமையும் இறையருளும் நம் எல்லோருக்கும் வந்து சேரும்.

இவை யாவற்றிற்கும் நிதி சேர்க்கும் முகமாக பல முயற்சிகளை எமது தொண்டர்கள் செய்து வருகிறார்கள். உதாரணமாக தீபாவளி Food Festival, Musical Journey ஆகியவற்றில் பல தொண்டர்களின் உழைப்பால் ஒவ்வொரு வருடமும் டொலர் பதினைந்தாயிரம்(15,000) சேர்க்கப்டுகின்றது, சிறுதுளி பெரு வெள்ளமாக தொடர்ந்து உதவுங்கள். இது நாம் எமது மக்களுக்காகவும் எதிர்காலச் சந்ததியினருக்காவும் செய்யும் தொண்டேயன்றி எமது இறைவன் மகேசனுக்காகச் செய்யும் தொண்டல்ல. எமது காலத்திலேயே இவ்வேலைகள் யாவற்றையும் பூர்த்தி செய்ய எங்களுக்கு பக்கபலமாக இருந்து உதவுங்கள் என்று உங்களைக் கேட்டுக்கொள்வதுடன் எம் முருகப்பெருமானின் ஆசி உங்கள் அனைவருக்கும் கிடைக்கவும் பிரார்த்திக்கிறேன்.

மேலும் இக்கோயிலின் வளர்ச்சிக்கும் நமது சைவப்பணி தொடரவும் தொடர்ந்து உதவி செய்துவரும் தொண்டர்கள் அனைவருக்கும் எமது நிர்வாக சபையின் சார்பில் மனமார்ந்த நன்றியை தெரிவித்துக்கொள்கிறோம். மற்றும் தினசரி காலை மாலை பூசைகளையும் முக்கியமான வருடாந்த திருவிழாக்களையும் சிறப்பாகச் செய்து எமது கோயிலின் வளர்ச்சிக்காகப் பாடுபட்டுவரும் எமது ஆலய பிரதம குருக்கள் வேதாகமாமணி பிரம்மசிறி ராஜேஸ்வரக் குருக்கள் மற்றும் பிரம்மசிறி மயூரநாதக் குருக்கள் மற்றும் வெங்கட்ராம சர்மா ஆகியோருக்கும் எமது நன்றியையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக்கொள்கிறோம்.

மேலும் இங்கு குறிப்பிடாத பலர் பல்வேறு வழிகளில் எமது ஆலயத்திற்கு ஒத்துழைப்பை வழங்கிய வண்ணம் உள்ளார்கள். அவர்கள் அனைவருக்கும் ஆலய நிர்வாக சபையின் சார்பில் நன்றியையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக்கொள்கிறோம்

இறுதியில் சிறுவர் சிறுமியர் இங்கு பாடும் தேவார புராணங்கள் இக் கோயிலுக்கு வரும் பக்தர்களுக்கு மனநிம்மதியை அளிக்கின்றன என பக்தர்கள் என்னிடம் தெருவித்திருக்கிறார்கள். இவையெல்லாம் கேட்கும்போது எந்த நோக்கத்தோடு இக் கோயிலை அமைத்தோமோ அது இப்போது முழுமையாக நிறைவேறியுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். இவையெல்லாம் எம்பெருமான் முருகவேள் நடத்திய அற்புதமே.

கந்தனை எந்த உறவு கொண்டு வழிபட்டாலும் அவனிடம் யாம் வேண்டுவது "பொன்னும் பொருளும் போகமும் அல்ல அருளும் அறனும் அன்பும் மட்டுமே".

இறுதியாக

"வைய நூடுக மாமழை மன்னுக

மெய் விரும்பிய அன்பர் விளங்குக

சைவ நெறிதாம் தழைத்து ஓங்குக

தெய்வ வெண் திருநூறு சிறக்கவே"

என்று முருகப்பெருமானை வணங்கி விடைபெறுகிறேன்.

நன்றி

வணக்கம்

கந்தையா குமாரசாமி

தலைவர்

நியுசூலாந்து திருமுருகன் திருப்பணிச்சபை

145 தேவாலய வீதி

ஒக்லாந்து

நியுசூலாந்து